*ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேஶிகாய நம:*

# *ஆசார்யர் அருளும் 64*

*ஸ்ரீ உ வே நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர் , ஆசிரியர்.*

---

*நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்கு செய்து வைக்கும் உத்தமமான தகுதிகளும் நன்மைகளும் அத்புதமானவை .ஸ்ரீ ஆபஸ்தம்ப பகவான் ஆசார்யராலே கிடைக்கும் மந்த்ரோபதேஶம் சிஷ்யனுக்கு ஶ்ரேஷ்டமான மூன்றாவது ஜன்மம் என்று கொண்டாடுகிறார். தாயிடம் முதலில் பிறக்கிறான். உபநயனத்தில் காயத்ரியைப் பெறுவது இரண்டாம் பிறவி . ஆசார்யரிடம் மந்த்ரோபதேசம் மூன்றாவது பிறவி .*

*ஆசார்ய ஸமாஶ்ரயணம் அவ்வளவு உயர்வானது.*

*1.ஆசார்யர் ஸமாஶ்ரயணத்தின் போது ஶிஷ்யனுக்கு முதலில் க்ருச்ரம் முதலான ப்ராயஶ்சித்தங்களை செய்துவித்து நெடுங்காலம் சிஷ்யனுக்கு சம்பவித்திருந்த போஜன அசுத்தி, தீட்டு அசுத்தி , இன்னும் பஞ்ச இந்த்ரியங்களாலும் அசுத்தி எல்லாவற்றிலிருந்தும் விடுவிக்கிறார்.*

*2.ஸ்ரீ ஸுதர்ஶன , பாஞ்ச ஜன்ய மந்த்ரங்களை உபதேசித்து தோளில் பரிசுத்தமான தாப ஸம்ஸ்காரத்தை செய்விக்கிறார்.*

*3. இந்த ஸம்ஸ்காரம் சிஷ்யனுக்கு ஏராளமான நன்மைகளைத் தருகிறது. சங்க சக்ர சின்னங்களைத் தோளில் பொறித்துக் கொண்டவனுக்கு பின்னர் யமபயமே கிடையாது. நரகமே கிடையாது.*

*4. ஆசார்யரிடம் பெற்றுக் கொண்ட ஸ்ரீ ஸுதர்ஶன பாஞ்ச ஜன்ய மந்த்ரங்களை தினமும் ஜபித்து வருபவர்க்கு வாழ்வில் அநேகமாக எந்த பயமும் குறையும் வராது.*

*5.ஆசார்யர் பன்னிரண்டு திருமண்காப்புகளை சிஷ்யனுக்கு சாற்றி அந்தந்த திருமண் ஸ்ரீசூர்ணத்துக்குண்டான மந்த்ரங்களையும் த்யான ச்லோகங்களையும் உபதேசிக்கிறார்.இதற்குப் பிறகுதான் விலக்ஷணமான பன்னிரு திருமண்காப்புகளை சாற்றிக் கொள்ளும் தகுதியும் பாக்யமும் சிஷ்யனுக்கு வருகிறது. இதற்கு முன் கிடையாது.*

*6.இந்த சமயத்தில் ஆசார்யர் உபதேசிக்கும் கேசவாதி பன்னிரு மூர்த்தி த்யான ச்லோகங்கள் மிக விசேஷமானவை. ரகைஷ்யாக இருப்பவை.*

*7.தினமும் திருமண் இட்டுக் கொண்டவுடன் எவ்வளவு நேரம் இந்த த்யான ச்லோகங்களில் உபதேசித்தபடி பகவந் மூர்த்திகளை நம் அவயவங்களில் நிறுத்தி த்யானம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஆத்ம சுத்தியும் தேஹ சுத்தியும் ஏற்பட்டு பயம் கவலை பதட்டம் நீங்கி வ்யாதிகளும் ஓடிப் போகும். ஆத்ம சக்தியும் வளரும்.தேஜஸ்ஸூம் கூடும்.*

*8.ஆசார்யர் அருளியதால் இட்டுக்கொள்ளும் பன்னிரு திருமண்களுடன் செய்யும் சத்கார்யங்களுக்குத்தான் பல மடங்கு பலனும் உண்டு . ஒரு திருமண்ணுடன் செய்தால் சிறிது பலன். திருமண் இல்லாமல் செய்தால் பலனே கிடையாது. விபரீத பலனும் நிறையவே உண்டு.*

*9. பன்னிரு திருமண்காப்புகளுடன் பெரியவர்களின் கோஷ்டியில் சேர நிற்கும் தகுதியும் ஆசார்யரால்தான். இல்லையேல் ஒதுங்கிதான் நிற்கவேண்டும் . அபாங்தேயன் என்கிற தோஷமும் ஏற்பட்டு பெரியவர்களுடன் கூட பந்தியில் அமர்ந்து சாப்பிடக்கூட தகுதி இல்லை.*

*10.ஆசார்யர் ஸமாச்ரயணத்தின் போது மூன்றாவது ஸம்ஸ்காரமாக தாஸ்ய நாமத்தை சிஷ்யனுக்கு அளிக்கிறார். அதாவது இந்த ஆத்மா பகவத் பாகவத ஆசார்யர்களுக்கு அடிமை என்கிற பட்டம் அளிக்கிறார். இதுதான் ஜீவனுக்குக் கிடைக்கும் மிக உயர்ந்த பட்டம். இந்த பட்டம் பெற்றவரின் தாஸ்யத்தைதான் பகவான் உகந்து ஏற்றுக் கொள்கிறான். வேலைக்கு சேர்ந்து பணம் சம்பாதித்து வயிற்றை நிரப்பிக் கொள்ள ஏதேதோ பட்டமே முக்யம் என்றுதானே எல்லாரும் கடலலையாய் அலைகிறார்கள். அதெல்லாம் அல்பத்துக்கு பட்டங்கள். பகவானுக்கு த்ருப்தியாக வேலை செய்கிற கைங்கர்யம் என்கிற உன்னதமான லாபத்தைப் பெற ஆசார்யர் அளிக்கும் தாஸ்ய நாமம் என்கிற பட்டம்தான் ஜீவனுக்கு பொருத்தமான பட்டம். அது ஆசார்யர் தந்தால்தான் பெருமாள் ஒத்துக் கொள்வார்.*

*11.ஆசார்யர் செய்துவைக்கும் நாலாவது ஸம்ஸ்காரம் மந்த்ரோபதேஶம் . முக்யமாக ரஹஸ்யத்ரயத்தை உபதேசிக்கிறார். இம் மூன்று மந்த்ரங்களின் அவச்யமும் பெருமையும் சுருங்கச் சொல்ல முடியாது. இம் மூன்று மந்த்ரங்களுக்கு மேலான எந்த வித்யையும் கிடையாது. பதினெட்டு வித்யாஸ்தானங்களுக்கும் சமம் இந்த மூன்று மந்த்ரங்கள் என்று ஸ்ரீதேசிகன் சாதித்துள்ளார். அமையா இவை என்னும் ஆசையினால் அறு மூன்று உலகில் சுமையான கல்விகள் சூழ வந்தாலும் தொகை இவை என்று இமையா இமையவர் ஏத்திய எட்டிரண்டெண்ணிய நம் சமயாசிரியர் என்று அருளினார். நித்ய ஸூரிகளும் போற்றும் வித்யையாம் ரஹஸ்யத்ரயம் எனில் இதன் மேன்மை நம்மால் சொல்ல ஆகுமோ?*

*12. இம் மூன்று மந்த்ரங்களுடன் ஸ்ரீமத் ராமாயணம் முதலான க்ரந்தங்களையும் லகுவாக ஸமாச்ரயணத்தின் போது உபதேசிப்பார். இதன் பிறகுதான் எந்த உயர்ந்த க்ரந்தத்தையும் வாசிக்கும் தகுதி சிஷ்யனுக்கு கிடைக்கிறது.*

*13. உயர்ந்த க்ரந்தங்கள் இதிஹாச புராணங்கள் எதை வாசித்தாலும் கிடைக்கும் நன்மைகளும் சமாச்ரயணத்திற்குப் பிறகுதான் .உதாரணமாக தினமும் ஸ்ரீமத் ராமாயணம் பாராயணம் செய்பவர்களுக்கு வறுமையே கிடையாது. இது அனுபவ சித்தம்.ஐஶ்வர்யம் புத்ர லாபஶ் ச பவிஷ்யதி நஸம்ஶய: என்று ஸ்ரீ வால்மீகி பகவானும் ஸ்ரீமத் ராமாயண பலச்ருதியில் ப்ரதிஜ்ஞை செய்துள்ளார். இது பலிக்கவேண்டுமானால் ஆசார்ய உபதேசம் பெற்றவர்களுக்குத்தான் .*

*14.ரஹஸ்ய த்ரய மந்த்ரங்களை பெற்றபிறகுதான் மற்ற எந்த மந்த்ரங்களையும் , அதாவது ஸுதர்ஶன ந்ருஸிம்ஹ ஹயக்ரீவ ராம க்ருஷ்ண கருட மந்த்ரங்கள் எதையும் ஆசார்யரிடமோ மற்ற எவரிடமோ உபதேசமாகப் பெற்றுக் கொள்ளும் தகுதியும் ஜபித்து அதனால் கிடைக்கும் அமோகமான பலன்கள் ,விசேஷ ஸித்திகள் கிடைக்கும் வாய்ப்பும் வரும்.*

*15.ரஹஸ்ய த்ரய மந்த்ரோபதேசத்திற்குப் பின்னர்தான் சிஷ்யனுக்கு சித்தாந்த க்ரந்தங்களை காலக்ஷேபம் கேட்கும் தகுதி*

*வருகிறது. காலக்ஷேபம் பண்ணி அதனால் வரும் ஜ்ஞான ப்ராப்தியும் அதனால் வரும் நிஷ்டைகளும் ஆத்மானந்தங்களும் தத்வ ஹித புருஷார்த்த அனுபவங்களும் சொல்லுக்கு நிலமல்ல.*

*16.ஆசார்யர் தாம் அரும் சிரமங்கள் பட்டு சேகரித்த ஜ்ஞானத்தை சிறுகுழந்தைக்கு பாயஸம் ஊட்டுவதுபோல் அன்போடு அருளும் ஆனந்தத்தை அனுபவிக்கும் கொடுப்பினையும் மந்த்ரோபதேசத்திற்குப் பின் தான்.*

*17.ஸமாச்ரயணத்தின் போது ஐந்தாவதாக சிஷ்யனுக்கு யாகம் என்கிற ஸம்ஸ்காரம் உபதேசிக்கப் படுகிறது. அதாவது பெருமாள் திருவாராதனம் உபதேசிக்கப் படுகிறது. இதற்குப் பிறகுதான் சிஷ்யன் செய்யும் தேவ பித்ரு கார்யங்கள் எதற்கும் பலன்.தேவர்களுக்கு த்ருப்தி . பித்ருக்களுக்கு த்ருப்தி. பெருமாள் திருவாராதனம் ஸ்வார்த்தமாகவோ அல்லது மற்றவர்களுக்காக வோ செய்வதற்கும் தகுதியே இதற்குப் பின் தான்.*

*18.எத்தனையோ பேர் கோவில்களில் திருவாராதனம் செய்து தாங்களும் பிழைத்து மற்றவர்களுக்கும் பெருமாளின் திவ்ய அனுக்ரஹத்தைப் பெற்றுத் தந்து ஊரும் நாடும் வாழச் செய்வதும் ஆசார்ய ஸமாஶ்ரயணம் எனும் இந்த தகுதியால்தான்.*

*19. ஆசார்யர் பல நியமங்களுடன் சீராக இருந்து வாழ்ந்து இப்படி பல சிஷ்யர்களை உருவாக்குவதால் நாமும் தனிமரமாக இருந்து விடாமல் பெரிய ஸமுதாயம் நம் ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயம் என்று நிமிர்ந்து நடைபோட முடிகிறது.*

*20. ஆசார்யர் அளித்த யோக்யதையால் காலக்ஷேபம் செய்து காலக்ஷேப அதிகாரிகளாவதும் , காலக்ஷேபம் சாதிக்கும் அதிகாரிகளாவதும் , ஸதஸ்ஸுகளில் வாக்யார்த்தம் செய்யும் தகுதியும் பெருமையும் சந்தோஷமும் சமூஹத்தில் அந்தஸ்தும் பெறுவதும் எல்லாம் ஆசார்யரால்தான்.*

*21.ஆசார்ய சமாச்ரயணம் செய்யாதவர் செய்யும் உபதேசம் வேரில்லாக் கொத்தான் கொடி போல் கேழ்ப்பவர்களுக்கும் பாழே செய்யும் என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்ரீ தேசிகன் சாதித்துள்ளார். ஆசார்ய உபதேசம் பெற்றவர் ஆசார்யர்*

*உபதேசித்ததை உபதேசித்தால் அதைக் கேழ்ப்பவருக்குத்தான் நன்மை வரும் என்றார்.*

*22.ஸமாச்ரயணம்  ஆனால்தான் வைஷ்ணவன் ஆகிறோம். எத்தனையோ பேர்கள் தளிகை செய்து ஜீவிக்கிறார்கள். திருமடப்பள்ளியில் கை வைப்பதற்கே ஆசார்ய சமாஶ்ரயணம்தான் முதல் தேவை. அது அகத்திலாகட்டும் அல்லது கோவிலிலாகட்டும் . ஆசார்யரால்தான் தளிகை செய்யும் தகுதிகூட வரும். இல்லையேல் இல்லை.*

*23. க்ருஹங்களிலும் ஆணோ பெண்ணோ யாருக்கும் தளிகை செய்யும் நிஜமான தகுதி சமாச்ரயணத்திற்குப் பின் தான். சமாச்ரயணம் ஆகாமல் செய்பவர்களின் தளிகை ஹோட்டல் சமையல் போல்தான் .*

*24.சமாச்ரயணம் ஆனவர்கள் செய்த தளிகையாக இருந்தாலும்  அந்த தளிகையை சமாச்ரயணம் ஆகாதவர்கள் தொட்டாலே அது ஆசாரத்துக்கும் உதவாது. அதனால் பெருமாளுக்கும் உதவாமல் ஹோட்டல் சமையல் போல் ஆகிவிடும். ஆசார்ய சமாச்ரயணம் அவ்வளவு தேவை.*

*25.வைஷ்ணவ தம்பதியில் கணவனுக்கோ மனைவிக்கோ சமாச்ரயணம் ஆகவில்லையெனில் சமாச்ரயணம் ஆகாதவர்கள் அவைஷ்ணவர்களே . அவைஷ்ணவர்கள் தொட்ட அன்னம் சாப்பிடத் தகாதது .அதனால் கணவன் மனைவிகூட தங்களுக்குள் தொட்டு சாப்பிடும் உரிமை பெறுவது ஆசார்ய சமாச்ரயணத்தினால்தான்.*

*26.சாதத்தை ப்ரசாதமாக்காமல் சாப்பிட்டால் மஹாபாவம். சாதத்தை ப்ரசாதமாக்குவது எப்படி? பெருமாளுக்கு சமர்ப்பித்தால்தான் ப்ரசாதமாகும் . ஆசார்ய சமாஶ்ரயணம் ஆகியிருந்தால்தான் பெருமாளுக்கு சமர்ப்பித்தால் பெருமாள் அமுது செய்வார். ஆக நாம் சாப்பிடுவதற்கே ஆசார்யரின் சம்பந்தம் இல்லையேல் சாப்பிடவே உண்மையில் உரிமை கிடையாது.*

*27. ஸ்ரீவைஷ்ணவர்கள் நம் அகத்தில் சாப்பிடும் பாக்யம் வேண்டுமானால் நமக்கு சமாஶ்ரயணம் ஆகி யிருக்கவேண்டும். மற்றவர்க்கு சாதம்  அளிப்பதற்கும்  நமக்கு ஆசார்யன்தான் உரிமையைத் தருகிறார்.*

28.கணவனும் மனைவியும் பரஸ்பரம் தொட்டுக் கொண்டு குடும்பம் நடத்தி குழந்தைகள் பெறுவதற்கும் இருவரும் முன்னமேயே ஆசார்ய சமாஶ்ரயணம் செய்து கொண்டிருக்கவேண்டும் . இல்லாவிடில் சாந்திகல்யாணமே கிடையாது. இது ஏதோ புது விஷயமாக இருக்கிறதே என்று அநேகம் பேர் இன்று நினைக்கலாம். ஐம்பது வருஷத்திற்கு முன்வரை எல்லா வைஷ்ணவர்களும் மிகக் கட்டாயமாக பிசகாமல் நடத்தி வந்த நெறிதான் இது. இன்னும் பல நூறு குடும்பங்களில் பெரியோர் வழி பிசகாமல் அனுஷ்டிக்கப் படுவதும்தான் இது. எந்த தர்மத்திலும் அவைஷ்ணவம் கலந்து விடக் கூடாது. அதுவும் மிகவும் ச்ரேஷ்டமான க்ருஹஸ்த தர்மமான தாம்பத்யத்தில் அவைஷ்ணவம் கலந்து விடவே கூடாது. அதனால் தாம்பத்யமும்கூட ஆசார்ய சமாச்ரயணம் ஆன பின் தான் என்றால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆசார்யரின் முக்யத்வத்தை எப்படி பிணைத்து வைத்திருக்கின்றார்கள் பெரியோர்கள் என்று காண்க.

29.தாம்பத்யத்திற்குமே ஆசார்யசமாஶ்ரயணம் கட்டாயம் அவச்யம் என்று ஏதோ சங்கேத சட்டம் இது என்று நினைக்க வேண்டாம் . ஸ்ரீ வ்யாஸ பகவான் ஸ்ரீமந் மஹாபாரதத்தில் சாதித்தார். ஒரு குழந்தை பிறக்கும்போது பெருமாள் விசேஷ கடாக்ஷம் செய்ய வேண்டும். அதற்கு ஜாயமான கடாக்ஷம் என்பர். இது கிடைத்தால்தான் குழந்தை சத்தான குழந்தையாக இருந்து பக்திமானாகவும் முக்திமானாகவும் ஆகமுடியும் என்கிறார்.

ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேத் மதுஸூதந: /
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: //
என்று நிர்ணயித்துள்ளார்.

பெருமாள்மட்டும்தான் குழந்தையை ஜனிக்கும்போது கடாக்ஷிக்க வேண்டும் . மற்ற தெய்வங்கள் ஒருவரும் கடாக்ஷிக்கக் கூடாது.அவர்கள் கடாக்ஷித்தால் அநர்த்தம்தான் என்கிறார் வ்யாசர். மற்ற தெய்வங்களை குழந்தை பிறந்த அந்த சமயத்தில் நெருங்க விடாமல் இருப்பதற்கும் பெருமாள் மாத்திரம் அனுக்ரஹிக்கவேண்டும் என்பதற்கும் முன் தகுதியாக அந்த குழந்தைக்காக தம்பதிகள் தாங்கள் ஆசார்ய

சமாஶ்ரயணத்தினால் முன்னமேயே ஸ்ரீவைஷ்ணவர்களாகி யிருக்க வேண்டும்.ஸ்ரீவைஷ்ணவதம்பதியின் குழந்தை என்பதால் பெருமாள் கட்டாயம் ( அருளுக்குத் தக்கவன் = அளியன் ) அளியன் நம் பையல் என்று கடாக்ஷித்து கருவிலே திருஉடையவர் ஆக்குவார். ஆதலால் , மனைவிக்கு ஆசார்ய சமாஶ்ரயணத்தின் முன்பே கரு தரிக்கும்படி நேர்ந்து விட்டிருந்தாலும் பும்ஸவனம் ஆவதற்கு முன்பேயாகவாவது அவளுக்கு சமாஶ்ரயணம் செய்து வைத்து விடவேண்டும். அப்போதுதான் பிறக்கும் குழந்தைக்கு ஜாயமாந கடாக்ஷமும் வைஷ்ணவத்வ சித்தியும் கிட்டும் . இல்லாவிட்டால் ஜாயமாந(பிறக்கும் ) சமயத்தில் வேறு ஏதாவது துஷ்ட தேவதைகளின் பார்வை ஏற்பட்டு அந்த குழந்தை பிறக்கும்போதே அவைஷ்ணவனாகப் பிறக்கிறது. அவைஷ்ணவனுக்கு என்னென்ன தோஷங்கள் உண்டோ , நஷ்டங்கள் உண்டோ அத்தனையும் அந்த குழந்தைக்கு உண்டு. பிற்காலத்தில் அந்த குழந்தைக்கு ஏதோ அத்ருஷ்ட வசத்தினால் ஆசார்ய சம்பந்தம் ஏற்படும் வரை அவைஷ்ணவத்வ தோஷம் போகாது.

30. ப்ராஹ்மணர் அப்ராஹ்மணர் ஸ்த்ரீ புருஷர்கள் எவர்க்கும் ஆசார்ய ஸமாச்ரயணம் அவச்யம். ஸ்ரீவைஷ்ணவத்வம் என்கிற பரமலாபம் ஆசார்யர் தருவது . ஸ்ரீவைஷ்ணவத்வம் எனும் இது வேறு , ப்ராஹ்மணர் அப்ராஹ்மணர் என்கிற ஜாதி தர்ம மூலமான வேறுபாடு வேறு.பிறப்பினால் வந்த ப்ராஹ்மண அப்ராஹ்மண அனுஷ்டான வித்யாஸங்கள் என்றும் மாறாதுதான் என்றாலும் ஜாதி வித்யாஸமில்லாமல் எல்லார்க்கும் நிலத்தில் வாழும் நித்ய ஸூரிகள் போன்ற மஹாப்ரபாவத்தை அளிப்பதும் தேவர்களும் வணங்க வேண்டிய மஹிமையை அளிப்பதும் ஸ்ரீவைஷ்ணவத்வம் .இதை அளிப்பவர் ஆசார்யர்.

எந்த ஜாதியாயினும் ஜாதி போகாது .பங்கன பல்லி, நீலம் , கிளிமூக்கு, மல்கோவா என்று மாமரங்களிலும் ஜாதி என்பது அததன் சரீரதர்மத்தால் அமைவது. அதுபோல் ஜாதி மாறாது. ஆனால் பணக்காரன் என்பதால் ஜாதி சிந்தனையை ஒதுக்கி தனி அந்தஸ்தை சமுதாயம் ஒருவர்க்கு அளிப்பது போல் ஜாதி

*நிலைத்திருந்தாலும் ,தத்வ வித்துகளாலும் நித்ய ஸூரிகளாலும் ஶ்லாகிக்கப்படும் ஸ்ரீவைஷ்ணவத்வம் என்கிற தனி மேன்மை எல்லா ஜாதியினர்க்கும் ஆசார்யர் அளிப்பதாகும் .*

*31. ஆசார்யர் தம்முடைய ஆசார்யர் ப்ராசார்யர்களின் அனுஷ்டானங்கள் , வைராக்யங்களை அறிந்து வைத்திருந்து தாமும் அனுஷ்டித்து வருவதோடு சிஷ்யருக்கும் முற்காலத்திய உயர்ந்த நிலைகளைக் காட்டித்தரும் பாடமாக இருக்கிறார்.*

*32. தம் ஆசார்ய ப்ராசார்யர்களின் ஸம்பந்தம் , ஸம்பாஷணைகள் , சாதித்த நல்வார்த்தைகள், சந்தேஹ விளக்கங்கள் , சம்பவ விசேஷங்கள் முதலியவற்றை ஆசார்யர் அவ்வப்போது நினைவு கூர்ந்து அனுபவித்து சிஷ்யர்களுக்கும் இந்த அரிய நல்லவைகளை அறிய வைக்கிறார்.நம்மை பழைய காலத்திற்கே அழைத்துச் சென்று விடுகிறார்ல்.*

*33. தம்முடைய ஆசார்யர்களின் ஜ்ஞானானுஷ்டான பக்தி வைராக்யங்களை பிற்காலத்தவர் அறியாமல் இழந்து விடக்கூடாது என்பதால் பல க்ரந்தங்களை காலக்ஷேபம் சாதிப்பது மாத்திரமன்றி தத் தத் காலத்திற்குத் தக்கவாறு க்ரந்தங்களை எளிதாக்கி நிர்மாணித்து பிற்காலத்தவற்கு என்றும் கண்ணொளியாக இருப்பவர் ஆசார்யர்.*

*34.ஸ்ரீதேசிகன் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் அஞ்சிறைய மடநாராய் பதிகத்தின் ச்லோகத்தில் ஆசார்யரின் பத்து கல்யாண குணங்களை சாதிக்கிறார். அதில் கடைசியாக அந்தரங்கோக்தி யோக்யாந் என்று ஒரு குணத்தை சாதிக்கிறார். ஆசார்யர் சிஷ்யர்களின் அந்தரங்கமான பேச்சைக் கேட்டுக்கொள்ளத் தகுந்தவர் என்கிறார். அதாவது எந்த விஷயத்தையும் ஆசார்யரிடம் சிஷ்யர்கள் சங்கோசமில்லாமல் சொல்லி தீர்வுகாணும்படியாக ஆசார்யர் கள் இருக்கிறார்கள் என்கிறார்.*

*35.நமக்கு எந்த நல்ல விஷயத்திற்கு பத்திரிகை எழுதுவதற்கும் முதலில் ஆசார்ய ஸ்மரணம் செய்து ஆசார்யரின் அருளால்தான் நடக்கிறது என்று அறிவித்துதான் பத்திரிகை தயாரிக்கிறோம். இது நம் பெரியோர்களின் பாடம்.*

*36. அந்த சுபம் முடிந்தவுடன் ஆசார்ய சம்பாவனை செய்துதான் பூர்த்தியும் செய்கிறோம். ஆசார்ய*

*சம்பாவனையால்தான் சுபகர்மாக்கள் குற்றம் நீங்கி பூர்த்தியடைந்து மேன்மேலும் நலம் நல்கும்.*

*37. அபரகர்மாக்களும் மிக முக்கியமாக ஆசார்ய சம்பாவனையால்தான் குற்றம் குறைகள் நீங்கி பித்ருக்களுக்கு த்ருப்தி தந்து நமக்கும் பாரத்தை நீக்கி பித்ருக்களின் அனுக்ரஹத்தை தரும்.*

*38.பொதுவாகவே ஆசார்யஸ்மரணமாத்ரமே பல தப்புகளுக்கு ப்ராயஶ்சித்தமாக ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன . ஸம்பாஷ்ய புண்யக்ருதோ மநஸா த்யாயேத் என்று ஸ்ம்ருதியை ஸ்ரீதேசிகனும் உதாஹரித்துள்ளார். தகாத பேச்சுக்கு ப்ராயஶ்சித்தம் ஆசார்ய ஸ்மரணம் என்பதாம். இதேபோல் பல விஷயங்களுக்கு ப்ராயஶ்சித்தம் ஆசார்ய ஸ்மரணம், ஆசார்ய உச்சிஷ்டம் .*

*39.நம் சம்ப்ரதாயத்தில் சரம ஶ்லோகபத்ரிகையிலும் ஆசார்யரின் திருவடிகளை அடைந்ததைத்தான் குறிப்பிடுவது வழக்கம் . இதுவே ஶாஸ்த்ரம். பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி என்று இராமானுச நூற்றந்தாதியில் இது காட்டப் பட்டது. இஹ அமுத்ர தத் பாதௌ ஶரணம் தேசிகா விது: என்றும் ,அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ ஶரணம் மதீயம் என்று ஆசார்யர்களாலும் , பாதமூலம் கமிஷ்யாமி யா ந் அஹம் பர்யசாரிஷம் என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் ஶபரீ வாக்யத்தாலும் காட்டப்பட்டது.*

*40.ஆசார்யரிடம் நாம் பெறும் பொக்கிஷம் இன்னொன்று உண்டு. திருவடிச் சுவடும் ஸ்ரீபாதுகைகளும்.சகல ஆராதனங்களுக்கும் ச்ரேஷ்டமானது ஸ்ரீ பாதுகாராதனம்தான்.*

*41.ஸ்ரீபாதுகா தீர்த்தம் ப்ரஹ்ம கூர்ச்ச பஞ்ச கவ்யத்தைவிட பவித்ரமானது என்று ஸ்ரீமத் சின்னாண்டவன் சாதிப்பார் என்று நம் ஆச்ரம ஆசார்யர்களின் திருவாக்கு.*

*42.ஏகாதசி வ்ரதம் குறைபடுவதெல்லாம் மறுநாள் பாரணைக்கு முன்பாக காலையில் ஆசார்ய பாதுகா தீர்த்தம் ஸ்வீகரிப்பதால் மட்டுமே நீங்கும் என்பதால் சகல ஸ்ரீவைஷ்ணவர்களும் அன்றாவது பாதுகாராதனம் செய்து தீர்த்தம் ஸ்வீகரிப்பதைக் காண்கிறோம்.*

*43.ஆசார்யர்கள் ஆங்காங்கே பல சிரமங்கள் பட்டு ஸஞ்சாரம் செய்து தேடிச் சென்று ஶிஷ்யர்களை பொன்னாக்குவது உண்டு. ஸ்ரீமத் பெரியாண்டவன் ஒரே வேளை பிக்ஷையுடன் அதுவும் சில கவளங்கள் ப்ரஸாதம் மாத்ரம் ஸ்வீகரிப்பவராக இருந்தாலும்கூட ஸ்ரீரங்கத்திலிருந்து பாதசாரியாகவே சென்று கர்நாடக தேசத்தில் கூட சம்ப்ரதாயத்தை வளர்த்தார்.ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் பாத ஸஞ்சாரத்தில் ஒருசமயம் பாதுகா பல்லக்கு எழுந்தருளப் பண்ணுபவரிடம் இப்போது நான் ஏன் நடந்து போய்க் கொண்டிருக்கின்றேன் சொல்லேன் பார்க்கலாம் என்றாராம். சஞ்சாரத்திற்குதான் என்றாராம் சிஷ்யர். அதில்லை! நான் தான் உனக்கு (மக்களுக்கு) ஆசார்யன் என்று சொல்வதற்குதான் ஸஞ்சாரம் போகிறேன் என்றாராம் இரங்கும் மெல்லிய குரலில் ஆசார்யர்.*

*44.பேயாழ்வார் திருமழிசைப்பிரானைத் திருத்திப் பணி கொண்டதுபோல் ஆசார்யர் சிஷ்யர்களைத் திருத்திப் பணிகொள்வதுண்டு. மெல்ல மெல்ல திருத்திப் பணிகொள்ளும் அழகும் உண்டு.*

*45.பொய் மதங்களையும் போலி சாமியார்களையும் சேர்ந்து விடாமல் இருக்க சிஷ்யருக்கு என்றும் நம்பிக்கை விளக்காய் இருப்பவர் ஆசார்யரே.*

*46.எங்குப் போய் உய்வேன் என்று அழன்று, கர்மக் கடல்களில் சுழன்று பட்டு, ஸம்ஸாரிகளின் ஊடே நடமாடக்கூடத் தகுதியில்லாத ஜீவாத்மாக்களுக்காக ,மாளாத வினை யனைத்தும் மாள ,பெருமாளிடம் மன்றாடி பரம ரஹஸ்ய உபாயமான ஶரணாகதியினால் இப்பிறவிக்குப் பின் எப்பிறவியும் பிறவாதபடி அருளி தானாக எப்போது ஆயுள் முடிகிறதோ இதமாக அப்போது பரம பதம் அளித்து நித்ய ஸூரிகளுக்கு மத்தியில் கொண்டு போய் நிறுத்தும் அத்புதத்தைச் செய்து கால தத்வமுள்ளதளவும் எல்லையிலாத பரிபூர்ண ப்ரஹ்மானுபவத்தில் ஆழ்த்திவிடும் நம் ஒரே ஆனந்த உபாயம் ஆசார்யர் மட்டும்தான் .ஆசார்யர்கள் செய்துவைக்கும் சரணாகதியால் முக்தி நிஶ்சயம்.*

*47.வேண்டுவோர்க்கு இடை யிடையேயும் வினைகள் மாள ப்ராயஸ்சித்த ப்ரபத்தியும் செய்து வைக்கும் ஒரே உபாயமும் நம் ஆசார்யரே.*

*48.ப்ரபத்தி செய்தவர்கள் ப்ரபத்திக்குப் பிற்காலத்தில் தாங்கள் அறியாமலோ கவனக் குறைவினாலோ செய்யும் பிழைகளை பெருமாள் முழுதும் மன்னித்துவிடுவதாக ஶாஸ்த்ரங்கள் சொல்கின்றன. இந்த பொது மன்னிப்பும் ஆசார்யர் செய்து வைத்த ப்ரபத்தியின் மஹிமைதான்.*

*49.ப்ரபன்னர்கள் அறிந்தே செய்யும் பிழைகளுக்கு லகுர் தண்ட: ப்ரபந்நஸ்ய என்று ஸ்ரீதேசிகன் சாதித்துள்ளார். வேலிட்டுப் பாய்ந்து தண்டிக்க வேண்டியதையும் பெருமாளே நம் தயா பாத்ரம் என்று பாசத்துடன் லேசாக முள்ளிட்டு சிறிதாக தண்டிப்பதுவும் நமக்கு ஆசார்யர் செய்துவைக்கும் ப்ரபத்தியின் பலம்தான்.இந்த லாபம் ப்ரபத்தி செய்து கொள்ளாதவர்க்கு கிடையவே கிடையாது.*

*50.பல சமயங்களில் ப்ரபன்னர்களின் தவறுகளுக்காக பெருமாள் தாமே பல வழிகளில் ப்ரபன்னர்களுக்கு, ப்ராயச்சித்தங்கள் செய்ய சத்விஷயமான சந்தர்பங்களை உருவாக்குவார். எப்படியும் ப்ரபன்னர்களை தண்டிக்காமல் இருக்க வேண்டும் என்று பெருமாளையே ஏங்கச் செய்யும் மஹிமையும் ஆசார்யர் செய்துவைத்த ப்ரபத்திக்கு உண்டு.*

*51.ஆசார்யர் அனுக்ரஹித்த ப்ரபத்தியின் ப்ரபாவத்தினால் இங்கு வாழும் நாளில் இந்த ஆத்மா என்னாகப் போகிறதோ? என்ற ஜன்மாந்தரக் கவலை இல்லாமல் ஹாய் என்று இருக்க முடிகிறது.*

*52.நமக்கு கஷ்டமான அனுபவங்கள் வந்தாலும் ,தேஹ யாத்ரை கர்மாதீனம் , எல்லாம் இந்த ஜன்மத்தோடு தொலைந்தது என்று கைகழுவி யிருந்து பதட்டத்தை குறைத்துக் கொள்வதும் ஆசார்யர் செய்துவைத்த ப்ரபத்தியை அவ்வப்போது ஸ்மரித்துக் கொள்வதால்தான்.*

*53.நம் குழந்தைகளின் படிப்பு சம்பாத்யம் க்ஷேமம் என்று சதா கவலைப்படுவதுபோல் நல்லோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆத்ம யாத்ரையைப் பற்றி கவலைப் பட்டாகவேண்டாமா ?. நம்மைப் போல நம் குழந்தைகளுக்கும்*

*ஆசார்ய அனுக்ரஹத்தைப் பெற்றுத் தந்துவிட்டால் கவலையே இல்லை பாருங்கள்.*

*54.தக்க சமயங்களில், வயதுகளில், பிள்ளை பெண் மாட்டுப் பெண் சகோதர சகோதரிகள் என்று அனைவர்க்கும் ஆசார்ய சம்பந்தம் கிடைத்துவிட்டால் குடும்பத்தில் ஒன்று போல எல்லாரும் கலந்து கொள்ள பரிமாறிக் கொள்ள ஒத்தாசை செய்து கொள்ள ஏதுவாகி எல்லாரும் பரஸ்பரம் சார் துணையாக இருந்து மகிழவும் இந்த ஆசார்ய சம்பந்தம்தானே வழி செய்கிறது.*

*55.சமூஹத்திலும் தனி வாழ்விலும் எத்தனையோ எதிர்பார்த்த, எதிர்பாராத , ஐஹிக ஆதாயங்கள் ஆசார்யருடைய கடாக்ஷத்தால் எல்லார்க்கும் வந்து விடுகின்றன . இதை எழுதுவது பாரமைகாந்த்யமில்லை யாதலால் விஸ்தரிக்க வேண்டியதில்லை.ஆனால் சந்தோஷப் படாமல் இருக்க முடியுமா?*

*56.நம் வாழ்வின் மிகப் பெரிய சுபதினங்களில் ஒன்று ஆசார்யரின் திரு அவதார தினமான திருநக்ஷத்ரம் . இதை பக்தி ப்ரத்தையுடன் கொண்டாடுவதற்கு ஈடான சத்கார்யம் வேறொன்றில்லை.இது கொடுத்து வைத்தவர்களுக்கு கொண்டாடக் கிடைப்பதும் ஆசார்யரின் இன்னருளே.*

*57.ஆசார்யரின் திருக்கரத்தால் கிடைக்கும் பெருமாள் தீர்த்தமோ , பாதுகா தீர்த்தமோ , மந்த்ராக்ஷதையோ மற்ற எதுவுமோ கிடைக்கப் பெறுவதும் இன்னருளே.*

*58.ஆசார்யரின் ஸ்ரீபாத தீர்த்தம் மஹா மஹிமை வாய்ந்தது . சிஷ்யனின் தலையில் உள்ள துர்லிபியையும் (கெட்ட தலை எழுத்தையும்) மாற்ற வல்லது.*

*59. சில அத்ருஷ்ட சாலிகளுக்கு தம் க்ருஹத்திற்கே ஆசார்யர் பொன்னடி சாற்றக் கிடைப்பதும் உண்டு.*

*60.இன்னும் மிகச் சில அத்ருஷ்ட சாலிகளுக்கு , ஆசார்யருக்கு பொதுவான கைங்கர்யங்கள் அந்தரங்கமான கைங்கர்யங்கள் செய்யவும் ,ஆசார்யரின் அருளால் கிடைக்கிறது.*

*61.சிஷ்யபாபம் குரும் வ்ரஜேத் என்பது மிகவும் திகிலான ஶாஸ்த்ரம். சிஷ்யனின் பாபத்தில் பாதி ஆசார்யருக்கு என்பது இதன் விளக்கமாக பெரியோர் சொல்வர்.*

*ராஜாநம் ராஷ்ட்ரஜம் பாபம் ராஜபாபம் புரோஹிதம்/*

*பர்த்தாரம் ஸ்த்ரீக்ருதம் பாபம் சிஷ்யபாபம் குரும் வ்ரஜேத்/*

*என்பது நாரதீய வசனம்.*

*தம் பரம் என்றிரங்கி என்ற ஸ்ரீதேசிகன் வாக்கைப்போல் வாத்ஸல்யத்தால் சிஷ்யர்களின் க்ஷேமத்திற்காக இந்த பாடு படுவதையும் துணிந்து தம் ஜ்ஞான பக்தி வைராக்ய அனுஷ்டான பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய மாகிற தவங்களினால் மலை மலையான அத்தகைய பாபங்களை யெல்லாம் தீயினில் தூசாக்கிக் கொண்டு பரம பவித்ரராக எழுந்தருளி யிருந்து கொண்டு சிஷ்யர்களை ரக்ஷித்து வரும் ஆசார்யருக்கு கைமாறு மாயனும் காண வல்லன் அல்லனே! எந் நன்றி செய்து ஆசார்யருக்குக் கடன் தீர்ப்போம்?*

*62.இத்தனை செய்யும் ஆசார்யருக்கும் கூரத்தாழ்வானுக்கு நாலூரான் போல் அபசாரம் செய்தாலும் சிஷ்ய கோடிகளை க்ஷமிப்பது நம் உயிர்க் கடமை என்று கூரத்தாழ்வானைப் போலவே கனிந்து கிடக்கும் ஆசார்யரின் தயாள குணம் சொல்லுக்கு நிலமோ?*

*63.நமக்குப் பின் வருங்காலத்தில் நம் சந்ததிக்கு ஆசார்யர் இல்லாமல் போகும் பேராபத்திலிருந்து காக்க, தகுந்த ஆசார்யர்களை உருவாக்கி அனுக்ரஹித்து வைக்கிறார் ஆசார்யர் .*

*64.இத்தனையும் தனக்கு என்று ஒரு சுகமும் பயனும் கருதாது எத்தனை ச்ரமப்பட்டாலும் தன்னலம் கலவாத த்யாக வாழ்வாக பெருமாள்,தாயார், ஆழ்வார் ,ஆசார்யாள், சிஷ்யாள், சம்ப்ரதாயம் , அனுஷ்டானம்,ஸ்ரீகோஶங்கள், என்ற நினைவில் மட்டும் வாழ்ந்து கொண்டு நம்முடன் பேசிக் கொண்டு நம்மை அருளிவரும் நடமாடும் பரம் பொருள் ஆசார்யர்.*

*இங்கு எழுதியுள்ள அத்தனையும் அநேகம் பேர் அனுபவித்து வரும் ஆசார்ய வைபவம்தான் . ஆனால் ஒரே வரிசையில் நினைத்துப் பார்க்க ஏதுவாகிறதால் எழுதி சமர்ப்பித்தேன்.இவற்றின் உள் அம்சங்கள் அனந்தங்கள்*

ஆகையால் அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தம் ஶதஶாகமாகப் பணைக்கும் .

ஆசார்ய அனுக்ரஹம்தான் பிறக்கும் (ஜாயமாந)க்ஷணம் முதல் பரமபதிக்கும் வரையிலும் அதற்கும் பின்னால் காலதத்வமுள்ளளவும் எல்லா நன்மைகளுக்கும் காரணம்.இவ்வளவு செய்து தரும் ஆசார்யர்கள் எதிர்பார்ப்பது எதுவாக இருக்கும்? அவருடைய பேச்சு செயல் மனோபாவங்களில் ஏதாவது ஓரிரு சாராம்ஶங்களையாவது சீடன் முழு மனதோடு வாழ்வில் கடைபிடிக்கவேண்டும் என எதிர்பார்ப்பார்.ஆசைப் படுவார்.அப்படி கடைபிடித்தால் வரும் நன்மைகள் அனந்தங்களாக இருக்கும்.இவ்வகையில் சீடன் நன்மையடைவதுதான் உண்மையில் ஆசார்ய ஸம்பாவனை. மாதிரியாக இதற்கு ஒரு சம்பவம் எழுதி முடிக்கிறேன்.

ஶ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருநாகைப் பட்டினத்தில் ஸௌந்தரராஜப் பெருமாளை சேவித்து கரைந்து போயாயிற்றாம் . சிஷ்யர்களிடம் சாதித்தாராம். அச்சோ ஒருவர் அழகியவா ! இந்த பெருமாளைப் பிரிய மனதில்லை . ஆனால் ஸஞ்சாரம் போயாகவேண்டும். இங்குள்ள நம் சிஷ்யர்கள் எனக்கு எந்த ஸம்பாவனையும் செய்ய வேண்டாம். இந்த அழகனை தினமும் வந்து சேவித்து ஒரு அஞ்ஜலி செய்துவிட்டுப் போங்கோள் . அதுதான் எனக்கு ஸம்பாவனை என்றாயிற்றாம் ஆசார்யர்.

ழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழழ.